# கனடாவில் அகதிகளின் உரிமைகோரல்கள்

நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல அஞ்சுகிறீர்களா? உங்களுக்கு கனடாவில் அகதிப் பாதுகாப்பை பெறக்கூடிய இருக்கலாம்.

யார் அகதி அந்தஸ்துக் கோரலாம், யார் அகதியாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பது பற்றிய விதிமுறைகள் உள்ளன. உதாரணமாக நீங்கள்:

- 2020 ஜுன் 24 ஆம் திகதிக்கு முந்திய ஒரு திகதியில் கனடாவில் நுழைந்திருந்தால், ஒரு வருடம் கழிய முன்னர் உங்கள் அகதிக் கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்
- ஒரு வெளியேற்றக் கட்டளை கிடைத்தால், உங்களால் கனடாவில் அகதி அந்தஸ்து கோரிக்கைய முன்வைக்க முடியாது

மேலும், அகதி அந்தஸ்துக் கோரிக்கையை முன்வைக்க நீங்கள் அதிக காலம் தாமதித்தால், உங்களுக்கு உண்மையில் பயம் இல்லை என்பது போலத் தோன்றக்கூடும்.

நீங்கள் முடிந்தளவு விரைவில் சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## கனடாவின் உள்ள இருந்தவாறு அகதி அந்தஸ்துக் கோரிக்கையை முன்வைப்பது எப்படி?

நீங்கள் கனடா குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை திணைக்களத்தின் (Immigration, Refugees and Citizenship Canada - IRCC) இணையதளத்தில் அகதி அந்தஸ்துக் கோரிக்கையை ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம். நீங்கள் உங்களைப் பற்றியும் உங்கள் அகதி அந்தஸ்துக் கோரிக்கை பற்றியும் உள்ள கேள்விகளுக்குப் பதிலளித்து, உங்கள் கோரிக்கைக்கான அடிப்படைப் படிவத்தை (Basis of Claim form - BOC) பதிவேற்ற வேண்டும்.

உங்கள் BOC ஒரு மிக முக்கிய ஆவணமாகும். அதில், உங்களுக்கு என்ன நடந்தது என்பதையும் உங்கள் சொந்த நாட்டில் நீங்கள் எதற்கு அஞ்சுகிறீர்கள் என்பதையும் நீங்கள் விளக்க வேண்டும். நீங்கள் சரியான, முழுமையான தகவல்களை வழங்க வேண்டும்.

கவனத்திற் கொள்ளவும்: நுழைவுத் துறைமுகமொன்றில் அகதி அந்தஸ்து கோருவதற்கு ஒரு வேறுபட்ட செயன்முறை உள்ளது. மேலும், நீங்கள் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து வருவதாக இருந்தால் வித்தியாசமான விதிகள் பொருந்தும்.

## அடுத்து என்ன நடக்கும்?

ஒரு குடிவரவு உதயோகத்தருடனான ஒரு நேர்காணலுக்கான திகதியொன்று உங்களுக்குக் கிடைக்கும். ஒரு அகதி அந்தஸ்துக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நீங்கள் தகுதியுடையவரா என்பதை அந்த உத்தியோகத்தர் தீர்மானிப்பார்.

நீங்கள் தகுதி பெற்றிருந்தால், நீங்கள் அகதியா இல்லையா என்பதைத் தீர்மானிக்க, பொதுவாக உங்களுக்கு அகதி அந்தஸ்துக்கான விசாரணை ஒன்று நடத்தப்படும்.

நீங்கள் தகுதி பெறவில்லை என்றால், உங்கள் அகதி அந்தஸ்துக் கோரிக்கை முடிவுக்கு வரும். அதன் பின்னர் கனடாவில் உங்களால் மீண்டும் ஒருபோதும் மற்றொரு கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியாது. பொதுவாக கனடாவை விட்டு வெளியேறும்படி உங்களுக்கு உத்தரவிடப்படும். ஆனால், உங்கள் நாட்டிற்குத் திரும்ப நீங்கள் அஞ்சினால், கனடாவில் தொடர்ந்து தங்க அனுமதி கோரி வெளியேற்றத்திற்கு முந்தைய இடர் மதிப்பீட்டிற்கு (PRRA) விண்ணப்பிக்க உங்களுக்கு வாய்ப்பு இருக்கலாம்.

## எனது அகதி அந்தஸ்து விசாரணையின் போது என்ன நடக்கும்?

உங்கள் அகதி அந்தஸ்துக் கோரிக்கை குறித்து உங்களிடம் கேள்விகள் கேட்கப்படும். உங்கள் பதில்கள், உங்கள் BOC-இல் நீங்கள் கூறியவற்றுடனும், உங்கள் கோரிக்கையில் உள்ள மற்ற ஆதாரங்களுடனும் ஒப்பிடப்படும்.

## எனது அகதி அந்தஸ்துக் கோரிக்கை தொடர்பில் என்னால் உதவி பெற முடியுமா?

ஆம். கனேடிய அகதிகள் சட்டம் பற்றி அறிந்த ஒரு வழக்கறிஞரிடம் நீங்கள் ஆலோசனை பெறுவது முக்கியமானது. உங்களுக்கு ஒரு வழக்கறிஞருக்கான கட்டணங்களைச் செலுத்த முடியாவிட்டல், லீகல் எய்ட் ஒன்றாரியோ (Legal Aid Ontario - LAO) அவருக்கான கட்டணத்தைச் செலுத்தலாம்.

அல்லது, லோ சொசய்டி ஒஃப் ஒன்றாரியோ உரிமம் பெற்ற ஒரு சட்ட உதவியாளரின் உதவியையும் நீங்கள் பெறலாம். அல்லது குடிவரவு மற்றும் குடியுரிமை ஆலோசகர்கள் கல்லூரியில் (College of Immigration and Citizenship Consultants - CICC) உரிமம் பெற்ற, பதிவுசெய்யப்பட்ட கனடிய குடிவரவு ஆலோசகரிடமிருந்து உதவி பெறலாம்.

### எனது அகதி அந்தஸ்துக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் என்ன நடக்கும்?

நீங்கள் கனடாவில் தங்கயிருந்து ஒரு நிரந்தர வதியுநராவதற்கு விண்ணப்பிக்க முடியும். உங்கள் திருமணமான அல்லது பொதுச் சட்ட துணைவர், உங்களைச் சார்ந்திருக்கும் பிள்ளைகள் மற்றும் அவர்களைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்காகவும் நீங்கள் நிரந்தர வதியுநர் அந்தஸ்துக்கு விண்ணப்பிக்கலாம்.

**நீங்கள் உங்கள் சொந்த நாட்டிற்குச் சிறிது காலத்திற்குக் கூட பயணம் செய்தாலோ, அங்கிருந்து கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்தாலோ, அந்தக் கடவுச்சீட்டைப் பயன்படுத்திப் பயணம் செய்தாலோ, அங்குக் குடியேறினாலோ, வீடு வாங்கினாலோ, அல்லது அங்கு ஒரு தொழிலைத் தொடங்கினாலோ, உங்கள் அகதிப் பாதுகாப்பையும் நிரந்தரக் குடியுரிமைத் தகுதியையும் இழக்க நேரிடும். நீங்கள் கனடா தவிர்ந்த ஒரு நாட்டில் குடியுரிமை பெற்றாலும் இது நடக்கலாம்.**

### எனது அகதி அந்தஸ்துக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

நீங்கள் கனடாவிலிருந்து. வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். உங்களுக்கு உள்ள தெரிவுகள் பற்றி உடனடியாக சட்ட ஆலோசனை பெறுங்கள். இந்தத் தீர்மானத்தை நீங்கள் சவாலுக்குட்படுத்தலாம்.

உதாரணமாக, சிலரால் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவில் மேன்முறையீடு செய்யலாம். எழுத்து மூலமான தீர்மானத்தைப் பெற்ற 15 நாட்களுக்குள் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

சிலரால் இந்தத் தீர்மானத்தை மீளாய்வு செய்யுமாறு மத்திய அரசின் நீதிமன்றத்திடம் கோர முடியுமாக இருக்கும். இது சட்டமுறை மீளாய்வு என்று அழைக்கப்படுகின்றது. அந்தக் கோரிக்கை, இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டு 15 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**சட்டபூர்வமாக கனடாவில் தங்குவதற்கு வேறு வழிமுறைகளும் இருக்கலாம். இது ஒரு பொதுத் தகவல் மட்டுமே.**

## உதவி பெறுவது எப்படி

**211 ஒன்றாரியோ** என்பது பல மொழிகளில் உதவி வழங்கும் ஒரு தகவல் மற்றும் பரிந்துரைப்பு ஹொட்லைன் ஆகும். அவர்களை வாரத்தில் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் அழைக்க முடியும். அவர்கள் உங்களுக்கு பின்வருவனவற்றை கூறலாம்:

- உங்களால் சட்ட உதவியை எங்கே பெறலாம், மற்றும்
- ஏனைய உதவி வகைகளைப் பெற ஒரு குடியேற்ற முகவரகத்தை அல்லது சமுதாய முகவரகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

211 Ontario ஐத் தொடர்புகொள்ளவதற்கு:

☎ தொலைபேசி ........ **211**
☎ TTY..................... **1-888-340-1001**
💻 **211Ontario.ca**

நீங்கள் ஒரு உள்ளூர் நூலகத்தை அல்லது சமுதாய சட்டக் கிளினிக்கைத் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு வருமானம் குறைவாக இருந்தால் வழக்கறிஞரைக் கேட்கவோ அல்லது உங்கள் உள்ளூர் சட்ட ஆலோசனை மையம் பற்றிய தகவல்களைப் பெறவோ, நீங்கள் **1-800-668-8258** என்ற இலக்கத்தின் ஊடாக LAO-வை அழைக்கலாம்.

10 அங்கத்துவ முகவர் நிலையங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட CLEO Six Languages Advisory Group ஆலோசனைக் குழுவுடன் சேர்ந்து, CLEO (Community Legal Education Ontario / Education juridique communautaire Ontario) அமைப்பு இதனைத் தயாரித்துள்ளது.
ஒன்ராறியோ ரிறிலியம் நிதியமும் (Ontario Trillium Foundation) மற்றும் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனமும் (Legal Aid Ontario) இந்தத் திட்டத்துக்கு நிதி உதவி அளித்துள்ளன.
பொதுவான சட்டப் பிரச்சினைகள் பற்றிய படிப்படியான தகவல்கள் CLEO'S **Steps to Justice** வலைத்தளத்தில் கிடைக்கப்பெறும். **stepstojustice.ca** ஐப் பார்க்கவும்.
இந்தப் பக்கங்களையும் மற்றும் வேறு சட்ட விபரங்களையும் தரவிறக்கம் செய்வதற்கு **cleo.on.ca** இணையத்தளத்தைச் சென்று பார்க்கவும்.